பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

03 09 2025 6.30

புதன்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. பாரம்பரியம் மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பாக தேசிய கல்விக்கொள்கை உள்ளது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

2. அங்கன்வாடி மையங்களை ஆரம்பப் பள்ளி வளாகங்களில் மாற்றுவதற்கான நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

3. நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4. மத்திய அரசின் திட்டங்களை முடக்கும் நோக்கில் திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemant காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் --

தேசிய கல்விக்கொள்கை பாரம்பரியம் மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் ஒருங்கிணைப்பை கொண்டுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

திருவாரூரில் உள்ள மத்திய பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்பங்களை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இதன் மூலம் அவர்கள் தங்களது துறைகளில் சிறப்பாக செயல்பட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் தங்கப்பதக்கங்களை வென்றவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் என்பது தமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அவர் கூறினார்.

எந்தவொரு கல்வியும் சமூகத்திற்கு நன்மை அளிப்பதாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கல்வி கற்பிப்பதில் இந்த பல்கலைக்கழகம் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் திருமதி திரவுபதி முர்மு பாராட்டு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு பின்னர் குடியரசுத் தலைவர் திருச்சி ஸ்ரீரங்கத்தில் சாமி தரிசனம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து திருமதி திரவுபதி முர்மு தில்லி புறப்பட்டுச் சென்றார்.

>><><><><<

அங்கன்வாடி மையங்களை ஆரம்பப் பள்ளி வளாகங்களில் மாற்றுவதற்கான நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி ஆகியோர் இதனை வெளியிட்டனர்.

நாடுமுழுவதும் 14 லட்சம் அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இதில் 2 லட்சத்து 90 ஆயிரம் அங்கன் வாடி மையங்கள் ஆரம்பப் பள்ளி வளாகங்களில் செயல்பட்டு வருகின்றன.

எஞ்சியவற்றை பள்ளி வளாகங்களில் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இந்த நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><<

நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்காக திமுக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் இத்திட்ட மாணவர்களுக்கான பயிலரங்கில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

பேரிடர் காலங்களில் சிறப்பாக பணியாற்றும் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களுக்கான வருடாந்திர ஊக்கத் தொகை 50 லட்சத்திலிருந்து ஒருகோடி ரூபாயாக உயர்த்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்பவர்களுக்கு விமானத்தில் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டதாகவும் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

>><><><<

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் தொற்றா நோய் பாதிப்பால் ஏற்படும் மரணங்கள் வெகுவாக குறைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று தேனியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடைகோடி மக்களுக்கும் உயரிய மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த திட்டம் தொடங்கப்பட்டதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – மா.சு – 39 செகண்ட்ஸ்)

>><><><<

மத்திய அரசின் திட்டங்களை முடக்கும் நோக்கில் திமுக அரசு செயல்படுவதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய அரசின் கடனுதவி திட்டங்களை பயனாளிகளுக்கு வாங்கிக் கொடுப்பதற்காக நடவடிக்கை மேற்கொண்ட பிஜேபியை சேர்ந்த மகளிரணி செயலாளரை திமுக நிர்வாகி தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

திமுகவினரின் இந்த ஆணவப்போக்கு கடும் கண்டனத்திற்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திமுகவின் தடைகளை தகர்த்து மத்திய அரசு திட்டங்களின் பயன்கள் தமிழக மக்களுக்கு கிடைப்பதை பிஜேபி உறுதி செய்யும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் பிரச்சினைகளுக்காக குரல் கொடுப்பவர்கள் மீது திமுக வெறுப்புணர்வு காட்டுவது ஏன் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

>><><><><<

வேளாண் பணிகளில் தொழில்நுட்ப பயன்பாட்டுக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருகிறது.

இதன் காரணமாக நாகை மாவட்டத்தில் விவசாயிகள் வேளாண் பணிகளில் ட்ரோன்களை பயன்படுத்தி வருகின்றனர்.

இது தங்களுக்கு மிகவும் பயனளிப்பதாக உள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – விவசாயிகள் – 35 செகண்ட்ஸ்)

>><><><><<

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்று வரும் ஆவணி திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான இறைவன் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – ரகுராஜா- 45 செகண்ட்ஸ்)

>><><><><<

வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி ஒடிசா கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக் கண்ணன் – 45 செகண்ட்ஸ்)

கடலில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த சில தினங்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரைக்கண்ணன் அறிவுறுத்தினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக் கண்ணன் – 42 செகண்ட்ஸ்)

>><><><><<

<u>மாவட்டச் செய்திகள்</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் மின்கழிவு சேகரிப்பு வாகனத்தின் சேவையை மாநில அமைச்சர் திரு அனிதா ராதாகிருஷ்ணன் இன்று தொடங்கி வைத்தார்.

---------------

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் மடத்திற்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

---------------

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூர் கோயிலில் இலவச இயற்கை மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.

---------------

சென்னை மாநகர காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் முகாம் ஆணையர் திரு அருண் தலைமையில் இன்று நடைபெற்றது.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemant காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-17. 13-21, 22-20 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Wang Yu Si-ஐ வென்றார்.

-------------

பீஹாரின் Rajgir-ல் நடைபெற்று வரும் ஆசியக்கோப்பை ஹாக்கிப்போட்டியின் சூப்பர் நான்கு சுற்றில் இந்தியா இன்று கொரியாவை எதிர்கொள்கிறது.

------------

கஸகஸ்தானின், Almaty-ல் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Swastika Ghosh பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>> <<